# தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்ற பிரச்சாரப் பொதுக்கூட்டம்! திருப்பத்தூரில் திருப்பத்தை உருவாக்கக் குவிந்தனர் பாரீர்!



## மக்களின் நம்பிக்கையைப் பெற்ற இந்த ஸ்டாலின் ஆட்சி செய்யும் தமிழ்நாடு இது!

# தமிழ்நாட்டை மீண்டும் டெல்லியிடம் அடகுவைக்க விடமாட்டோம்!

## திருப்பத்தூர் – தேர்தல் பிரச்சார மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சிமிகு உரை!

**திருப்பத்தூர், ஏப். 15-**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14-04-2026) திருப்பத்தூரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்துப் பேருரையாற்றுகையில், "பிரதமராக இருப்பவர் தரவுகளைப் படிக்காமல் ஒரு மாநிலத்திற்கு எதிராகப் பேசலாமா? அவரது பதவிக்கு அது அழகா?" என்றும் "திராவிட மாடல் அரசின் சாதனைகளுக்கான நன்றி அறிவிப்பு விழாவாகத்தான் 2026 தேர்தலை மக்கள் பார்க்கிறார்கள்." என்றும் - "இது தமிழ்நாடு! மக்களின் நம்பிக்கையை பெற்ற இந்த ஸ்டாலின் ஆட்சி செய்யும் தமிழ்நாடு! நீங்கள் என்னதான் அடிமை சேவகம் செய்தாலும், தமிழ்நாட்டை மீண்டும் டெல்லியிடம் அடகு வைக்க விடமாட்டோம்!" என்றும் குறிப்பிட்டார்.**

**கழகத்தலைவர்-முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

இரண்டு மாதங்களுக்கு முன்புதான், வடக்கு மண்டலப் பாக முகவர்கள் மாநாட்டிற்காக இதே மண்டலவாடிக்கு வந்தேன். மலைகள் சூழ்ந்த இந்த அழகிய இடத்தில் தி.மு.க. 'மாஸ்' காட்டி, எதிரிகளுக்கு மலைப்பை ஏற்படுத்தினோம். இப்போது மீண்டும், ஜவ்வாது மலையும், ஏலகிரியும், இயற்கை எழில் கொஞ்சும் அருவிகளும் நிறைந்த திருப்பத்தூர் மாவட்டத்திற்கு நான் வந்திருக்கிறேன்.

அதிலும், ஏலகிரியை, "ஏழைகளின் ஊட்டி" என்று செல்லமாகச் சொல்வார்கள். ஊட்டியில் இப்போது போக்குவரத்து நெரிசல் அதிகமாகி விட்டது, அதனால் ஏழைகள் மட்டுமல்லாமல், அனைவரும் நம்முடைய ஏலகிரியை நோக்கித்தான் இப்போது வந்து கொண்டிருக்கிறார்கள். ஏழாவது முறை தி.மு.க. ஆட்சி அமைய ஆதரவு கேட்டு நானும் வந்துவிட்டேன்.

### வேலூர் - திருப்பத்தூர் மாவட்டங்களில் - நமது வெற்றி சிறப்பாக இருக்க வேண்டும்!

வட தமிழ்நாட்டின் முக்கிய இரயில் சந்திப்பு இருக்கும், சோலைகள் ஆர்ந்த பேட்டையான ஜோலார்பேட்டை இருக்கும் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன்.

செய்யாறு, ஆரணியாறு ஆகிய ஆறுகளும், சந்தனம் மணக்கும் காடுகளும் கொண்ட திருப்பத்தூருக்கு வந்திருக்கிறேன். தமிழ்நாட்டின் 'Sandal City' நீங்கள்தான்! சந்தனம் மட்டுமா இங்கே மணக்கும்? 'உலகப் புகழ்' ஆம்பூர் பிரியாணியும் மணமணக்கும் மாவட்டம்தான், திருப்பத்தூர்!

நேற்று இராணிப்பேட்டை பரப்புரையை முடித்துவிட்டு, அப்படியே ஆற்காடு சென்று 'மக்கன் பேடா' சாப்பிட்டேன். நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள். தேர்தல் வெற்றிக்குப் பிறகு, ஆற்காடு பிரியாணியையும் சுவைக்க வருவேன் என்று சொன்னேன். அடுத்தநாளே ஆம்பூர் இருக்கும் உங்கள் மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன். ஆற்காடு, ஆம்பூர் எப்படி இரண்டு பிரியாணியும் சிறப்பு வாய்ந்ததோ,



அதேபோன்று இரண்டு மாவட்டங்களிலும் நமது வெற்றியும் சிறப்பாக இருக்க வேண்டும்!

திராவிட மாடல் 2.0 அமைய, இங்குள்ள தொகுதிகளில் திருப்பத்தூர் முழு வெற்றியைத் தர வேண்டும். தமிழ்நாடே தயாராகிவிட்டது! திருப்பத்தூரும் தயாரா? ('தயார்' என, மக்கள் குரல்.) நன்றி! ஏலகிரி பின்னணியிலிருந்து கேட்கிறேன்... ஏழாவது முறையாகத் தி.மு.க. ஆட்சிக்குத் திருப்பத்தூர் தயாரா? ('தயார்' என, கூட்டத்தினர் குரல்.) நன்றி!

அதற்காக, இப்போது உங்கள் அனுமதியோடு வேட்பாளர்களை அறிமுகப்படுத்துகிறேன். உங்களுக்கு நன்றாகத் தெரிந்தவர்கள்தான். இருந்தாலும், அறிமுகப்படுத்துவது என் கடமையல்லவா...!

முதலில், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அ. நல்லதம்பி அவர்கள். நல்லதம்பியின் தந்தை ஒன்றியச் செயலாளராக இருந்தவர். அவருக்குப் பிறகு, 2011 முதல் 15 ஆண்டு காலமாகத் திருப்பத்தூர் ஒன்றியச் செயலாளராக இவர் இருக்கிறார். 2016, 2021 இரண்டு முறையும் வென்ற நல்லதம்பிக்கு இந்த முறையும் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அ.செ. வில்வநாதன் அவர்கள். பத்தாண்டு காலம் ஊராட்சி மன்றத் தலைவராகவும், இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்து மக்கள் பணியாற்றிய வில்வநாதன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் மீண்டும் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கவிதா தண்டபாணி அவர்கள். இந்தத் தொகுதியில் கடந்த முறை அ.தி.மு.க.வின் சிட்டிங் அமைச்சரைத் தோற்கடித்து, நமக்கு வெற்றியைத் தந்தீர்கள். இந்த முறையும் தி.மு.க.தான் இங்கு வெற்றி பெற வேண்டும்! வேட்பாளர் கவிதா தண்டபாணி அவர்கள், ஒன்றிய அமைப்பாளர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் எனத் தொடர்ச்சியாகக் கழகப் பணி ஆற்றியவர். மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினராக மக்கள் பணியாற்றியவர். அவருக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தந்தாக வேண்டும்.

அடுத்து, வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த சையத் பாரூக் அவர்கள். 'தகைசால் தமிழர்' பேராசிரியர் அய்யா காதர் மொகிதீன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ள வேட்பாளர். இந்திய யூனியன் முஸ்லிம் லீகில் இளைஞரணி அமைப்பாளராக இருந்தவர். வாணியம்பாடி நகர்மன்ற உறுப்பினராக, நகர்மன்றத் துணைத் தலைவராக இருந்த சையத் பாரூக் அவர்களுக்கு 'ஏணி' சின்னத்தில் நீங்கள் எல்லாம் ஆதரவு தந்திட வேண்டும்.

இவர்கள் நான்கு பேரின் வெற்றியும் உறுதியா? ('உறுதி' என, மக்கள் முழக்கம்.) நன்றி! வேட்பாளர்கள் இப்போது உட்காரலாம். சீட் கன்ஃபார்ம் ஆகிவிட்டது.

### திருப்பத்தூர் மாவட்டத்துக்கு - நமது அரசின் திட்டங்கள்!

திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, திருப்பத்தூரில் ஏராளமான வளர்ச்சிப் பணிகளைச் செய்து வருகிறோம்! நானே, அரசு நலத் திட்ட விழாக்களுக்காக மட்டுமே இரண்டு முறை வந்து பயனாளிகளுக்கு உதவிகளை வழங்கியிருக்கிறேன்.

**திருப்பத்தூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு கூடுதல் கட்டடம்;**

**வாணியம்பாடி, ஆம்பூர், நாட்றாம்பள்ளி அரசு மருத்துவமனைகள் மேம்பாடு;**

**ஜோலார்பேட்டை மற்றும் வாணியம்பாடி ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்பாடு;**

**மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் திறப்பு;**

**வாணியம்பாடி - நிம்மியம்பட்டில் மினி ஸ்டேடியம்;**

**பள்ளிகளில் 114 அறிவியல் ஆய்வகங்கள்;**

**ஏலகிரி மலையில் சுற்றுச் சாலை;**

**ஏலகிரி சுற்றுலா வசதிக்காக ஒன்றியச் சாலைகள் மாவட்டச் சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது.**

**ஜவ்வாது மலை அடிவாரம் முதல் புதூர் நாடு வரை தார்ச் சாலை.**

**425 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் நடந்திருக்கிறது.**

**14 பாலங்கள் கட்டப்பட்டிருக்கிறது.**

**211 திருக்கோயில்களுக்குக் குடமுழுக்குச் செய்திருக்கிறோம்.**

**திருப்பத்தூருக்கு 182 கோடி ரூபாயில் குடிநீர்த் திட்டம்.**

**மேம்படுத்தப்பட்ட ஏலகிரி - ஜலகம்பாறை சூழல் சுற்றுலாத் தடம் தொடக்கம்;**

எல்லாவற்றிற்கும் மேலாக, அ.தி.மு.க. ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டிருந்த ஆம்பூர் ரெட்டிதோப்பு இரயில்வே மேம்பாலப் பணிகளுக்கு 66 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, பணிகளைத் தொடங்கிவிட்டோம். இந்தப் பகுதி மக்களின் 50 ஆண்டு காலக் கனவு நிறைவேறப் போகிறது!

திருப்பத்தூரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாபெரும் விளையாட்டு வளாகம் கட்டப்பட்டு வருகிறது. நான்கூட இரண்டு மாதங்களுக்கு முன்னால் வந்தபோது, நேரில் சென்று ஆய்வு செய்தேன்.

நல்லகுண்டா பகுதியில் 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், இன்னொரு 'சிப்காட்' அமைய இருக்கிறது.

பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய இடங்களில் அமைய இருக்கிறது.

திருப்பத்தூர் நகராட்சி பழைய பேருந்து நிலையம் இருக்கும் இடத்தில், அடுக்குமாடி வணிக வளாகம் வர இருக்கிறது.

ஆம்பூர் புதிய நூலகம் வர இருக்கிறது.

ஆலங்காயம் - நெக்னாமலை பகுதியில் 30 கோடியில் சாலைப் பணிகளும் நடக்கிறது. இந்த அளவிற்கும், இதற்கும் மேலும் திருப்பத்தூருக்காகச் செய்கிறோம்!

### தி.மு.க.வின் இன்னொரு முகத்தைப் பார்க்க வேண்டிவரும்!

**நீங்கள் கொண்டு வாருங்கள்! தமிழ்நாட்டு எம்.பி.க்கள் அனைவரும் கடுமையாக இதை எதிர்ப்போம். எங்கள் எதிர்ப்பை மீறி பார்லிமெண்ட்டில் நீங்கள் இதை நிறைவேற்றினாலும், உறுதியாகச் சொல்கிறேன்... மக்கள் மன்றத்தில் நாங்கள் சும்மா விடமாட்டோம். நான் உறுதியாகச் சொல்கிறேன்! பேறிஞர் அண்ணா மேல் ஆணையாகச் சொல்கிறேன். தலைவர் கலைஞர் மேல் ஆணையாகச் சொல்கிறேன். விடமாட்டோம். தி.மு.க.வின் இன்னொரு முகத்தை நீங்கள் பார்க்க வேண்டி இருக்கும்.**

### மோசமான நிலையில் - சென்னை - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை!

ஆனால், ஒன்றிய அரசு என்ன செய்கிறது? நான் மற்ற ஊர்களுக்கு எல்லாம் காரில் சென்று கொண்டிருக்கிறேன். ஆனால், நம்முடைய திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் செல்ல வேண்டுமென்றால், இரயிலில்தான் வருகிறேன். அந்த அளவிற்குச் சென்னை – பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை மோசமாக இருக்கிறது. இதைச் சுட்டிக்காட்டி ஒன்றிய அமைச்சர் மாண்புமிகு நிதின் கட்கரிக்குக் கடிதம்கூட எழுதியிருந்தேன். பல முறை நம்முடைய அமைச்சர் வேலு அவர்கள் நேராகச் சென்று பார்த்து சொல்லிவிட்டு வந்திருக்கிறார்.

ஆனால், தமிழ்நாட்டிற்கான திட்டங்கள் என்றால், அதில் அலட்சியம்; அவர்கள் சீக்கிரம் முடிக்க மாட்டார்கள்! மதுரையில் ஒரு எய்ம்ஸ் மருத்துவமனையையே 10 வருடங்களாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்! நான்கூட கேட்டேன்... "அது என்ன தாஜ்மஹாலா? இல்லை, தஞ்சை பெரிய கோயிலா? ஏன் இவ்வளவு தாமதம்" என்று கேட்டேன். இந்த அளவில்தான் தமிழ்நாடு மீதும், திருப்பத்தூர் மீதும், அவர்களின் அக்கறை இருக்கிறது.

தொடர்ச்சி 8 –ஆம் பக்கம்